**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**DVC. 13/2025**

**Examination of - PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | ஜமுனா |
| **Husband Name** | : | சிவா (எ) சிவக்குமார் |
| **Village** | : | கல்லாயி சொரத்தூர் |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | 38 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 19.11.2025.**

**1ம் எதிர் மனுதாரர் ஆஜர். 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கல்லாயி சொரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். நான் பெண்களை குடும்ப வன்முறைகளில் இருந்து தடுக்கும் சட்டத்தின் கீழ் மனுதாக்கல் செய்து உணவு உடை, இருப்பிடம், மருத்துவம் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு ரூபாய் 25,000/- ரூபாயும் நஷ்ட ஈடாக ரூபாய் 10,00,000/- சீதன பொருட்கள் மற்றும் வரதட்சணையாக கொடுக்கப்பட்ட பொருட்களை திருப்பிக்கொடுக்கும்படியும் ஒரு வீட்டினை வாடகைக்கு எடுத்து அதில் தங்க வைக்கும்படியும் மற்றும் பாதுகாப்பு கட்டளையையும் கொடுக்கும்படியும் 18 பவுண் தங்க நகை, இருசக்கர வாகனம், சீர்வரிசை பொருட்கள் ஆகியவற்றை கொடுக்கும்படியும் மனுதாக்கல் செய்து அதற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன். கடந்த

26.10.2016ம் தேதியில் எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணப்பத்திரிக்கை **மா.சா.ஆ.1** மற்றும் திருமண போட்டோ **மா.சா.ஆ.2** ஆகும். எனது ஆதார் அட்டை **மா.சா.ஆ.3** ஆகும். எதிர் மனுதாரரின் ஆதார் அட்டை **மா.சா.ஆ.4** ஆகும். 1ம் எதிர் மனுதாரருக்கும் 4ம் எதிர் மனுதாரருக்கும் பிறந்த குழந்தையின் பிறப்புச்சான்று **மா.சா.ஆ.5** ஆகும். 2ம் எதிர் மனுதாரர் ஆங்குணம் கிராமத்தில் உள்ள பட்டா எண்574ன் நகல் **மா.சா.ஆ.6** ஆகும். 2ம் எதிர் மனுதாரர் அண்டம்பள்ளம் கிராமத்தில் உள்ள பட்டா எண்193ன் நகல் **மா.சா.ஆ.7** ஆகும். 12.11.2015, 07.12.2015 ஆகிய தேதிகளில் மனுதாரரின் நகைகளை 1ம் எதிர் மனுதாரர் அவரின் பெயரில் அடகு வைத்து பணம் பெற்றதற்கான அடகு ரசீது -2 எண்ணிக்கை **மா.சா.ஆ.8** ஆகும். 17.12.2015, 14.01.2016, 27.06.2021 ஆகிய தேதிகளில் எனது நகைகளை 1ம் எதிர் மனுதாரர் அவரின் பெயரில் அடகு வைத்து பணம் பெற்றதற்கான அடகு ரசீதுகள் -3 எண்ணிக்கை **மா.சா.ஆ.9** ஆகும். 25.05.2018ம் தேதி அனைத்து மகளிர் காவல் நிலையம்,திருவண்ணாமலையில் கொடுத்த புகாருக்கான சி.எஸ்.ஆர். 177/2018ன் நகல் **மா.சா.ஆ.10** ஆகும். 18.09.2020-ம் தேதி அனைத்து மகளிர் காவல் நிலையம்,திருவண்ணாமலையில் கொடுத்த புகாருக்கான சி.எஸ்.ஆர். 278/2020ன் நகல் **மா.சா.ஆ.11** ஆகும். 23.11.2022ம் தேதி அனைத்து மகளிர் காவல் நிலையம்,திருவண்ணாமலையில் கொடுத்த புகாருக்கான சி.எஸ்.ஆர். 644/2022-ன் நகல் **மா.சா.ஆ.12** ஆகும். 19.08.2016-ம் தேதி எனது தகப்பனார் கண்ணன் அவருக்கு சொந்தமான நிலத்தை விநாயகம் என்பவருக்கு ஆவண எண். 2202/2016 மூலமாக கிரைய ஒப்பந்தம் போடப்பட்டு 1, 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு வரதட்சணையாக ரூபாய் 1 லட்சம் கொடுத்தார் அந்த கிரைய உடன்படிக்கை மனுவின் நகல் **மா.சா.ஆ.13** ஆகும். 1ம் எதிர்மனுதாரர் தனலட்சுமி என்பவரை திருமணம்

செய்து வாழ்ந்து வருவதற்கான போட்டோவை தாக்கல் செய்கிறேன் அது **மா.சா.ஆ.14** ஆகும். 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக திருவண்ணாமலை குடும்பநல நீதிமன்றத்தில் விவாகரத்துக் கோரி தாக்கல் செய்த HMOP. No. 131/2019, FCOP. No. 279/2020 ஆகியவை தள்ளுபடியானதற்கான சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **மா.சா.ஆ.15** ஆகும். திருவண்ணாமலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது நகைகள் மற்றும் பணத்தை திருப்பிக்கொடுப்பதாக 1ம் எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த நகல் தாக்கல் செய்கிறேன் அது **மா.சா.ஆ.16** ஆகும்.

(குறுக்குவிசாரணை செய்யவேண்டி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>Sd/– (M.C.Arun)<br>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>கீழ்பென்னாத்தூர் |